புதுமலர்: 10 தை - மாசி இதழ்: 01

இணை ஆசிரியர்கள்
பேரா.நிக்ஷன்
வே.மகாராஜா

# அனல்

2013

"நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும் படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை."

அப்போஸ்தலர் 18:10

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.01.2013

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - பார்வையில் தெளிவு!
- கவிதை - புதிது!
- வாலிபர் வளாகம் - நெகேமியாவின் நேசம்
- வினா விடை - 55
- மிகுந்த சந்தோஷம்
- ஜெபிக்கும் கரங்களின் இரகசியம்
- இவ்வருட தீர்மானங்கள்
- பக்தர்களின் பயிலகம்
- நற்செய்தி - வியப்பூட்டுகிறதா?
- குறுக்கெழுத்துப் போட்டி - 53
- கிரிக்கெட் மட்டை ஏன் கிடைக்கவில்லை?
- அருட்பணியாளர் சரிதை - ஜோண் ஸ்கடர்
- மூவரி முத்துக்கள்
- புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்தி


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி


The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்,
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்



**தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? — லூக்கா 23:40.**

**இவரோ (இயேசு) தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே — லூக்கா 23:41**

**குற்றம் எதுவும் செய்யாமலேயே சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டவர்தான் இயேசுகிறிஸ்து.** ஏனெனில் அநீதிமான்களாகிய எமக்காக அவர் நீதிமானாக மரித்தார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது, அவருக்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு குற்றவாளிகள் சிலுவையில் அறையப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவன் இயேசுவை நோக்கி நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். ஆனால் மற்றைய குற்றவாளி சொன்னான், **நீ இந்த ஆக்கினைக்குட்டவனாகவிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே** என்று அவனைக் கடிந்து கொண்டான். அத்துடன் நிறுத்தாமல் இயேசுவை நோக்கி; **ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும்** என்றான். இயேசு சொன்னார்: **இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்** என்றார்.

இரண்டு குற்றவாளிகளும் தாங்கள் செய்த பாவங்களுக்காகத் தொங்கினர். **இயேசு பாவிகளாகிய எமக்காகத் தொங்கினார்.** எமக்குத் தேவபயம் வேண்டும். **நல்ல கள்வன் சொன்னான்: நாமோ நியாயப்படி தண்டிக்கப் படுகிறோம்.** இதன் மூலம் இவன் தான் ஒரு பாவி என்பதையும், **இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில் லையே என்பதன் மூலம் இயேசு பரிசுத்தமானவர், குற்றமற்றவர், நீதிமான்** என்பதையும் காண்பிக் கிறான். அத்துடன் என்னை நினைத்தருளும் என்பது பாவியாகிய எனக்கு

இரக்கம் செய்யும், மன்னிப்புத்தாரும் என்பதையும் காண்பிக்கிறது. இவ் அறிக்கை மூலம் இயேசுவுடன் கூட இருக்கும் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்கின்றான்.

**இப் புத்தாண்டில் நீ இயேசுவை உன் இரட்சகராகப் பார்க்கப்பழகிக் கொள், உன்னிடமுள்ள குற்றத்தைக் குற்றமென, பாவத்தைப் பாவமென ஏற்று, இயேசுவிடம் இரக்கத்திற்காக வேண்டிக்கொள். தேவபயமற்ற குற்றவாளிக்கு கிடைக்காத வாக்குத்தத்தமும் நித்திய ஜீவனும் தேவனுக்குப் பயப்பட்ட குற்றவாளிக்கு கிடைத்தது. இயேசுவை மெய்யாக விசுவாசி. உன் பாவத்தை ஏற்று அறிக்கை செய். இப்புதிய ஆண்டில் நீ புது வாழ்வைக் கண்டுகொள்வாய்.**

– ஆசி□யர் –



# கதையும் 2013 கற்றதும்

## பார்வையில் தெளிவு

ஒரு குறிப்பிட்ட நகரத்தின் வர்த்தக சங்கமானது அதன் வருடாந்த நிகழ்விலே உரையாற்றுவதற்காக ஓர் பேச்சாளரை அழைத்திருந்தது. அந்த சமூகத்தின் பொருளாதார நிலைமை அந்தக் காலப் பகுதியில் மிகவும் பின்தங்கிய ஓர் நிலையில் காணப்பட்டதால் அங்கிருந்தவர்கள் மிகவும் அதைரியமான நிலையிலும் விரக்தியுடனும் காணப்பட்டனர். எனவே இந்தப் பேச்சாளரின் உரையானது தங்களுக்கு புது ஊக்கத்தை தரும் என அவர்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்தனர்.



அந்தப் பேச்சாளர் தனது உரையின் நடுவிலே ஒரு பெரிய வெள்ளைத் தாளை எடுத்து அதன் மத்தியிலே ஓர் கறுப்பு புள்ளியை இட்டார். அதன் பின்பாக அவர் அதை எல்லோருக்கும் முன்பாகவும் உயர்த்திக்காட்டி அவர்கள் என்ன காண்கின்றார்கள் எனக்கேட்டார். அப்போது அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவர், *"நான் ஒரு கறுப்பு புள்ளியைக் காண்கிறேன்"* என்று கூறினார். *"நன்று. வேறு என்னத்தை நீங்கள் காண்கிறீர்கள்?"* என்று கேட்டார் அந்தப் பேச்சாளர். அங்கிருந்த அனைவரும் ஒட்டுமொத்தமாக *"ஓர் கறுப்பு புள்ளியைக் காண்கிறோம்"* என்று பதிலளித்தனர்.

*"இந்தக் கறுப்பு புள்ளியை தவிர்த்து வேறு எதையும் நீங்கள் காணவில்லையா? கவனமாக பாருங்கள்"* என்று

மீண்டும் கூறினார் அந்தப் பேச்சாளர். *"இல்லை! இல்லை!"* என்றே பதில் அமைந்தது. அப்போது அந்தப் பேச்சாளர் புன்னகைத்து, *"அப்படியானால் இந்த பெரிய வெள்ளைத் தாளைக் குறித்து என்ன? நிச்சயமாகவே நீங்கள் எல்லோரும் இதைப் பார்த்தீர்கள். ஆனாலும் அதைவிடுத்து அந்த சிறிய கறுப்பு புள்ளியை மட்டுமே நீங்கள் கருத்தில் எடுத்துக் கொண்டீர்கள். ஏனெனில் உங்கள் பார்வை அப்படி அமைந்தது"* என்று கூறினார்.

*"இதே போன்று தான் எம் வாழ்க்கையிலும் எம்மை சூழ அநேக நல்ல காரியங்களும், எத்தனையோ ஆசீர்வாதங்களும் காணப்பட்டாலும் அந்த சிறிய கறுப்பு புள்ளி போல காணப்படும் பிரச்சினைகளையும், அதைரியமான நிலைகளையும், விரக்திகளையும் மட்டுமே பார்க்க எம் பார்வையை ஒருமுகப்படுத்துகிறோம். அந்தப் பெரிய வெள்ளைத் தாளுடன் ஒப்பிடும் போது அந்த கறுப்பு புள்ளி மிக மிகச் சிறியது, புறக்கணிக்கப்படக் கூடியது. ஆனால் நாம் பார்க்கும் பார்வை அதை பெரிதுபடுத்துகிறது"* என்று விளக்கினார் அந்தப் பேச்சாளர்.

*பிரியமானவர்களே! நீங்களும் அந்த சிறிய கறுப்பு புள்ளி போல காணப்படும் பிரச்சினைகளை பெரிதாக நினைத்து ஏங்கி தவிக்கின்றீர்களா? உங்கள் பார்வையை விரிவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையை சூழ அந்த வெள்ளைத் தாளைப்போல பரவியிருக்கும் தேவ ஆசீர்வாதங்களையும், மகிழ்ச்சியான தருணங்களையும், நல்ல உறவுகளின் ஐக்கியத்தையும் நினைத்துப்பாருங்கள். நாம் பிறந்த தருணம் முதல் இந்த நிமிடம் வரை எம் சிருஷ்டிகராகிய தேவனுடைய கையிலிருந்து எத்தனை எத்தனை ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறோம்? அவற்றை எண்ணித்தான் கணக்கிட முடியுமா?* **அவற்றுடன் ஒப்பிடும் போது எம் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளும், வேதனைகளும் எம்மாத்திரம்?**

**நன்றி சொல்லுங்கள் எம்மை நிறைவாக ஆசீர்வதிக்க காத்திருக்கும் தேவன், பிரச்சினைகளையும் சவால்களையும் மேற்கொள்ள பெலன் தருவார். ஆம்! இந்த புதிய வருடத்தில் எம்பார்வையை விரிவுபடுத்திக் கொள்வோம்.**

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**



கெ. இன்பரூபன்

# புதிது!

புது வருடக்காற்று
புன்னகையோடு வீசட்டும்
புதுக்கிருபையோடு
புலர்ந்து இசை பாடட்டும்
புதுமை சேர்ந்து
புதுப் பொலிவுடன் மிளிரட்டும்
புவி அழியும் கனவுகள்
புதுப் பூகம்பமாய் பாய்ந்திடட்டும்
புவிச் சரிதவியல்கள்
புனை கதை தேடித்திரியட்டும்
புதிய ஆண்டை
புதுமையாய் நாம் அநுபவிக்கட்டும்
புது வருடத்தின் தலைவராய்
புதுமை செய் தெய்வம் இயேசு ஆளட்டும்
புது நாட்களைக் கண்டவரே
புது அர்ப்பணிப்பில் திகழட்டும்
புது ஆசீர் பெறுவீராக.



# நெகேமியாவின் நேசம்!






**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!**

வாலிபத்தின் மேன்மையையும், நோக்கத்தையும் புரிந்து நடக்கும் ஓர் வாழ்வானது வித்தியாசமானதாகவே இருக்கும். இங்கே ஓர் மனிதன் நமக்கு முன் நிற்கின்றான். **தன் சொந்த தேசத்தில் இல்லை, அந்நிய தேசத்திலே ஓர் உயர்ந்த பதவியில் மதிப்புடனும் மரியாதையுடனும், போதிய வருமானத்துடனும் வேண்டிய பாதுகாப்புடனும், அனைத்து நன்மைகளும் பெற்று மிகவும் சிறப்புடன் வாழ்கின்றான் நெகேமியா.** அரசனின் நம்பிக்கைக்கு உரியவனாக எப்பொழுதும் அவன் அருகில் இருக்கத்தக்கதான பாக்கியத்தை உடையவன். அரசனின் பானத்தில் பானம்பண்ணும் அளவிற்கு உயர்த்தப் பட்டவன். அரசனுக்காக மரணத்தையும் சந்திப்பதற்கு தன்னை அர்ப்பணித்து இருந்தவன் (விஷம் கலந்த பானமாய் இருந்தால்).

**இத்தனையும் உடையவனாக இருந்த போதிலும் பரிசுத்தமான தேவனைக் குறித்த பக்தி வைராக்கியம் அவனை முழுவதும் ஆட்கொண்டு தேவஜனங்கள்படும் நிந்தையையும் தீங்கையும் கேள்விப்பட்டு ஒரு நிமிடம்கூட அவனை நிம்மதியாக இருக்க விடவில்லை.** தனக்கு



சொல்லப்பட்ட வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் தேவபிள்ளையின் இருதயத்தில் உண்டான காரியங்கள் இக் காலத்தில் ஒவ்வொரு தேவ பிள்ளையின் வாழ்வின் அனுபவமாய் மாற வாஞ்சிக்கின்றேன். தேவன் தன்னுடைய ஓங்கிய புயத்தாலும் மகா பலத்த கரத்தாலும் வல்லமையாலும் மீட்டெடுத்த ஜனங்கள் மறுபடியும், மறுபடியும் தீங்கையும், நிந்தையையும், அவமானத்தையும், கட்டுக்களையும் அடிமைத்தனத்தையும் நினைவில் கொண்ட நெகேமியா அழுகின்றான். **தேவஜனம் என்னும் ஆதங்கம்.** தேவன் தன் ஜனத்தோடு செய்து கொண்ட உடன்படிக்கைகளை நினைக்கின்றான். **தேவஜனம் தேவனை மதிக்காமல் நடந்ததையும், தங்களுக்கு கேடுவரத்தக்கதாக அன்னிய தேவர்களைச் சேவித்து தேவனுக்கு கோபம் மூட்டினதையும் எண்ணி அழுகின்றான்.** தேவனின் மகிமை இறங்கி மக்களை ஆசீர்வதித்த ஆலயத்தின் அலங்கம் இடிக்கப்பட்டு தேவை அற்ற காரியங்கள் உள்ளே வந்து அசுசிப்படுத்துவதையும் நினைத்து மனம் கசந்து துக்கித்து அழுகின்றான்.

**அழுகைக்குக் காரணம்; தேவன் தெரிந்து கொண்ட ஸ்தானம் சாம்பலாய் கிடக்கிறதே என்று.**

**நீ எதற்காக அழுகிறாய். எப்பொழுது அழுகிறாய். நெகேமியாவின் அழுகை நேசத்தினால் பாசத்தினால் தேவனுக்கான வைராக்கியத்தினால் உண்டானது.** தேவ சமுகத்தில் அழுது அழுது தேவனின் அன்பிலே மூழ்கவேண்டும். வெறும் அழுகை மாத்திரம் அல்ல தொடர்ந்து சில காரியங்களை நெகேமியா செயலாற்றுகின்றான். துக்கித்து, உபவாசித்து, மன்றாடி (Mourned, Fasted, Prayed) இம் மூன்றையும் ஒன்றாகவே நெகேமியா செய்கிறார். **இடிக்கப்பட்டு, எரிக்கப்பட்ட அலங்கத்திற்கு பதில் தேவன் மாத்திரம் தான் என்பதை அறிந்த நெகேமியா தன்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் தேவனை நோக்கிப்பார்க்கும் வண்ணம் பக்குவப்படுத்தகின்றான். அவன் அறிந்திருந்தான் மறுபடியும் தேவனால் இதை கட்டமுடியும் என்று.**

**நீயும் கூட உன் வாழ்வில் இடிந்து போய் அழிந்து, சிதைந்து கிடக்கும் காரியங்களை மறுபடியும் தூக்கி நிறுத்த வல்லமையுள்ள தேவனை நோக்கி இந்தக் காரியங்களை ஏறெடுத்துப்பார். நெகேமியாவின் நேசம் அவனை உபவாசிக்க, ஜெபிக்க வைத்தது. மக்களுக்காக விசேஷமாக சாத்தானின் ஆதிக்கத்தில், கோரப்பிடியில் இருப்போருக்காக.**

**நெகேமியாவின் நேச மன்றாட்டில் காணப்பட்டவை;**

**மகத்துவமும், பயங்கரமுமான தேவன் - நெகேமியா 1:5 பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மில்**

**அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே.** தேவனை புகழ்கின்றான். அவரை இருக்கிற வண்ணமாக பார்க்கும் நெகேமியா தேவனை ஆராதிப்பது மனிதனுக்கு கொடுக்கப்பட்ட பிரதான வேலை துதிகளின் மத்தியிலே அவர் பிரசன்னமாய் இருக்கிறார். உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற தேவன் என்று தேவ சமுகத்திற்குள் நுழைகின்றான்.

என் அன்பின் தம்பி தங்கையரே, தேவனின் மகத்துவத்தை நீ அறிய வேண்டும். **நெகேமியா 9:21 இப்படி நாற்பது வருஷமாக வனாந்தரத்தில் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு, அவர்களைப் பராமரித்து வந்தீர்; அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய்ப்போகவுமில்லை, அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை.** தேவ செயலையும் அவரின் மகத்துவத்தையும் பரிசுத்த வேதாகமம் முழுமையும் உணர்த்தி நிற்கின்றது. வேதத்தை வாசித்து அறிந்து கொள்.

**நெகேமியா 1:6. நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ் செய்தோம்.** தேவனின் மகத்துவத்திற்கு முன்பாக எந்த மனிதனும் தன் நிலையை உணர்வான். **1யோவான் 1:8 நமக்குப் பாவமில்லையென் போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.** எப்போதாவது நீ தேவனிடத்தில் உன் பாவங்களை அறிக்கை செய்தது உண்டா? நெகேமியா சொல்லுகின்றான் நீர் எங்களுக்கு தந்த கற்பனை, கட்டளை, நியாயங்களைக் கைக்கொள்ளாதே போனோம். **தேவ காரியங்களை அறிந்தும் புரிந்தும் நீ அவைகளை கைக்கொண்டு நடக்காதேபோவாயானால் அது பாவமாகும்.** பாவத்தினால் உண்டான விளைவு அலங்கம் இடிக்கப்பட்டு வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது. **நெகேமியாவின் நேசம் ஓர் சரியான பாவ அறிக்கைக்குள் கடந்து வருகிறது.**

**இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மெய்யான ஓர் பாவ அறிக்கைக்குள் நீயும், உன் குடும்பமும் நிச்சயமாகவே வந்தே ஆகவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.**

**நெகேமியா 1:11டி இரக்கம் கிடைக்கப்பண்ணியருளும். மன்றாட்டின் இறுதிப்பகுதி. தேவ இரக்கம் கிடைக்கும்படியாக கெஞ்சுவது ஆகும்.** நெகேமியா நன்கு அறிந்திருந்தான் தேவனுடைய இரக்கம் வேண்டும் என்பதனை.

சகோதரரே! நீங்களும் உங்கள் ஜெபங்களில் தேவனின் இரக்கத்துக்காக கெஞ்சுங்கள். கல்வியாகலாம், தொழிலாகலாம், திருமணமாகலாம், ஊழியமாகலாம், எதிர்காலத் திட்டங்களாகலாம். ஒன்று செய்யுங்கள் தேவ இரக்கம் கிடைக்கும்படியாக மன்றாடுங்கள்.

*தேவன் அவனின் நேச அழுகையையும்*
*பாச மன்றாட்டையும்*
*மகத்துவம் நிறைந்த துதியையும்*
*உண்மையான பாவ அறிக்கையையும்*
*இரக்கத்திற்கு கெஞ்சிய இருதயத்தைக் கண்டு*

**52 நாட்களில் அலங்கம் கட்டி முடிக்க ஆண்டவர் கிருபை அளித்தார். இன்றும் உன் நேசம் தேவன் மீதும் தேவ ஜனங்கள் பக்கமாயும் இருக்குமானால் இந்த தேசம் நிச்சயமாக உன்னால் ஆசீர்வதிக்கப்படும். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.**

**போதகர் வேதநாயகம் சுமணன்.**

## வினா விடை – 55

01. "ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்" என்று தீர்க்கதரிசனம் உரைத்தது யார்?
02. யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறியது யார்?
03. "சூரியன் உதிக்கையில் இருண்டு போகும்" என்றது யார்?
04. மார்க்கந்தம்பி அலைகிற நட்சத்திரங்களைக் குறித்து எச்சரிப்பது யார்?
05. இன்றைய தினம் கர்த்தருக்கு தன் காணிக்கைகளை செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார்? என்றவன் யார்?
06. துருவ சக்கர நட்சத்திரத்தைக் குறித்து எங்கே வாசிக்கிறோம்?
07. "சூரியனும் சந்திரனும் இருண்டு போகும்" என்றது யார்?
08. அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறியது யார்?
09. "சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்" என வாசிப்பதெங்கே?
10. "ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்" என்று வாசிப்பதெங்கே?



# மிகுந்த சந்தோஷம்!




**சி**தறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். இந்த சந்தோஷம் உண்டாவதற்கு காரணம்: இரண்டு.

***ஒன்று: சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். இயேசுகிறிஸ்து மனிதனுடைய பாவங்களுக்காக அடிக்கப்பட்டு இரத்தம் சிந்தி சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்து எழுந்தார் என்ற செய்தி சொல்லப்படுதல். பாவம் அறியாத அவர் நமக்காக பாவமானார்.***

**இரண்டாவது: இதைக் கேட்டவர்கள் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். மெய்யாகவே கிறிஸ்து நான் மரிக்க வேண்டிய இடத்தில் பாவத்தின் கோர தண்டனையைச் சுமந்து எனக்காக மரித்தார் என்று மெய்யாகவே நம்பி ஏற்றுக் கொண்டவர்களின் வாழ்க்கையில் புதிய வாழ்வும் மிகுந்த சந்தோஷமும் உண்டாயிற்று.**

இன்று கூட நீ இயேசுகிறிஸ்து எனக்காக மரித்தார் என்பதனை மனப்பூர்வமாக ஏற்று உன் பாவங்களை அவரிடம் அறிக்கையிட்டு விட்டுவிடுவாயானால் நிச்சயமாக உன் வாழ்விலும் உன் குடும்பத்திலும் மிகுந்த சந்தோஷம் உண்டாகும்.


**ரேமா**







**கி**றிஸ்தவம் என்றாலே எல்லார் நினைவிலும் வருவது; **சிலுவை, சிலுவையில் தொங்கும் கிறிஸ்து, வேதாகமம், தேவாலயம், ஜெபம் மற்றும் "கூப்பிய இரு கரங்கள்" தான்.** இதில் கடைசியான ஜெபிக்கும் கரங்கள் ஓவியம் பிறந்த வரலாற்றை ஒரு புத்தகத்தில் படித்தேன். **ஜெபநிலையில் இருப்பது போன்ற அந்த ஓவியம் உலக பிரசித்தி பெற்றது. அந்த ஓவியத்தை ஆல்பர் டீயூரா** (Albert Durer) **என்பவர் வரைந்தார்.** அவருக்கு கிங்ஸ்டன் என்றொரு நண்பர் இருந்தார். இருவரும் ஓவியக்கலை பயின்று சிறந்த ஓவிய நிபுணர்கள் ஆகவேண்டுமென்று விரும்பினர்.



ஆனால் அது பயில்வதற்கான பணவசதியோ, அவர்களிடம் இல்லாதிருந்தது. வறுமையை எண்ணி வேதனைப்பட்ட அவர்களுக்கு திடீரென உதித்தது ஒரு யோசனை. சீட்டு போட்டு யார் பெயர் முதலாவது வருகிறதோ அவர் முதலாவது ஓவியம் பயில வேண்டும். அதற்கு செல்லும் செலவை மற்றவர் வேலை செய்து சந்திக்க வேண்டும். முதலாமவர் படித்து முடித்து சம்பாதிக்கும் நிலை வரும் போது மற்றவர் ஓவியம் பயில வேண்டும் என்பதாக.

அந்த சாரத்தின் அடிப்படையில் தங்கள் பெயர்களை இரு துண்டு காகிதங்களில் எழுதி சீட்டுப்போட்டனர். **சீட்டு ஆல்பர்ட் டீயூரரின் பேருக்கு விழவே டீயூரர் ஓவியக்கலை பயில கிங்ஸ்டன் மிகக்கடினமாக உழைத்து இருவரது செலவுகளையும் பார்த்துக் கொண்டார்.** சில வருடங்களுக்குள் ஓவியக்கலை பயின்று முடித்த டீயூரர் தன் நண்பர் கிங்ஸ்டனைப் பார்த்து இனி நீ ஓவியக்கலை பயிலச் செல்லலாம். அதற்கான செலவுகளை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார்.

ஆனால் கிங்ஸ்டனோ அதற்குள் ஓவியக்கலை பயில இயலாத நிலைக்கு ஆளாகியிருந்தார். **காரணம், நித்தமும் கல் உடைத்து உடைத்து அவரது கைகள் காய்ப்பு காய்த்திருந்தன. ஓவியம் வரைய சுலபமாக வளையும் தன்மையை இழந்துவிட்டிருந்தன.** அதனால், டயூராரிடம் நீ ஒரு சிறந்த ஓவிய நிபுணராக வந்தாலே அது எனக்குப் போதும். இன்னும் அதன் நுணுக்கங்களை கற்றுக்கொள். தொடர்ந்து நானே வேலை செய்து உன் செலவுகளை கவனித்துக் கொள்கிறேன் என்றார் கிங்ஸ்டன். **அதைக் கேட்ட டயூரரின் உள்ளம் சுக்குநூறாக உடைந்தது. நண்பன் தன் மேல் காட்டும் அக்கறையையும், பாசத்தையும் கண்டு கண்ணீர் மல்க கிங்ஸ்டனைக் கட்டித்தழுவினார் டயூரர்.**

சில நாட்களுக்குப் பின்பு, கிங்ஸ்டனை சந்திக்கச் சென்றார் டயூரர். அவர் தங்கியிருந்த அறை வளாகத்திற்குள் நுழையுமுன்னே அங்கே ஜெப சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. சத்தம் கேட்ட திசை நோக்கி மெதுவாக நகர்ந்த டயூரருக்கு அங்கே இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. **அறையில் தன் இரு கரங்களைக் குவித்த நிலையில் ஆண்டவரே, என் நண்பன் டயூரர் ஓவியக்கலையின் எல்லா நுணுக்கங்களையும் கற்றுத்தேற அவனுக்கு உதவி செய்யும் என மன்றாடிக்கொண்டிருந்தார் கிங்ஸ்டன்.** அதைக் கண்ட டயூரரின் கன்னங்களில் கண்ணீர் வழிந்திட, தனக்காக தன் நண்பன் படும் பிரயாசங்களைக் கண்டு ஒன்றும் பேச முடியாமல் திகைப்புற்றுப் போனார். **தெளிவு வந்த பின்னர், தன் நண்பனின் ஜெப நிலையில் இருந்த கரங்களை அப்படியே மனத்திரையில் பதிந்து கொண்டு தன் வீட்டிற்குச் சென்று அதையே ஓவியமாக வரைந்து கிங்ஸ்டனின் காண்பித்தார் டயூரர். அதுவே ஜெபிக்கும் கரங்கள் என்கிற அந்த புகழ்பெற்ற ஓவியம். இருவரும் ஒருவரையொருவர் அன்பினால் கட்டித்தழுவி, பரிசுத்த முத்தத்தால் வாழ்த்திக் கொண்டனர்.**

**இதுவே இந்த ஜெபிக்கும் கரத்தின் இரகசியம்.**

## அறிவித்தல்

அன்பான வாசகர்களே! கடந்த வருடம் முழுவதும் நீங்கள் எமக்குத் தந்த சகல ஒத்துழைப்புக்களுக்காக வும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் வருடத்திற்குரிய முதலாவது சஞ்சிகையை உங்களுக்கு அனுப்பி வைக்கின்றோம். தயவு செய்து உங்கள் பணத்தை அனுப்பி உங்கள் சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

"நன்றி" - ஆசிரியர் -




**பெண்கள் பக்கம்**

- 01. சாந்த குணம்
- 02. கடமை உணர்வு
- 03. சிக்கனம், ஆடம்பரமற்ற வாழ்வு
- 04. புத்தியுள்ள ஸ்திரியாய் இருத்தல்

## 01. சாந்த குணம்

**பிலிப்பியர் 4:5ய உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக.** நாம் காயப்படும் போது பொறுமையாக இருத்தல் சாந்தகுணத்தின் ஒரு வெளிப்பாடாகும். **அப்போஸ்தலர் 7:54-60** ஸ்தேவான் மேல் ஒருமனப்பட்டு கல்லெறிந்து அவனைக் கொலை செய்த போது **அவனோ முழங்காற்படியிட்டு ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.** இப்படிச் சொல்லி நித்திரையடைந்தான். **அப்போஸ்தலர் 6:15[b] அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்.** கடந்த வருடம் நாம் அநேகர் காயப்பட்டு நம்முடைய சாந்த குணத்தை இழந்திருக்கலாம்.

ஆனாலும் புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கிற நாம் ஒரு தீர்மானம் எடுப்போம். நாம் காயப்படும் போது பொறுமையாக சாந்தமாய் இருந்தால் **மத்தேயு 5:5 சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.** கூறப்பட்டுள்ளது போல் நாம் பாக்கியவான்களாய் இருப்போம்.

## 02. கடமை உணர்வு

**யோவான்6:9-14** ஒரு சிறுபையன் அப்பத்தோடும்மீனுடனும்இருப்பதை சீஷர்கள் கண்டார்கள். இந்த பையனின் தாய் தன்னுடைய பிள்ளைக்கு தேவையான ஆகாரத்தை தயாரித்துக் கொடுத்திருக்கலாம். அப்படி பார்க்கும் போது **பையனின் தாய் தன்னுடைய கடமையை சரிவரச் செய்தபடியால் தேவநாமம் மகிமைப்பட்டது.**

கடந்த வருடம் ஒருவேளை உன்னுடைய கடமைகளை நீ சரிவரச் செய்யாமல் இருந்திருக்காலம். ஆனால் இப் புதிய வருடத்தில் குடும்ப வாழ்க்கையில் கடமைஉணர்வு உள்ளவளாய் பையனின் தாய் போல் செயற்பட்டால் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருந்து தேவநாமத்தை மகிமைப்படுத்தலாம்.

## 03. சிக்கனமும் ஆடம்பரமற்ற வாழ்க்கையும்

*சிக்கனம் என்று சொல்லி துணியை குறைவாக வாங்கி ஆடையை தைப்பதோ, பிள்ளைக்கு உணவு கொடுக்காமல் சீட்டு போட்டு நகை செய்வதல்ல.* **ஆடம்பரமற்ற வாழ்க்கை வரவிற்கு ஏற்ப செலவு செய்தல். 1தீமோத்தேயு 5:6 சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்.**

கடந்த ஆண்டு கடனாளியாக வாழ்ந்து கர்த்தருடைய நாமத்திற்கு அபகீர்த்தி ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நமது ஆண்டவருடைய வாழ்க்கையில் வேதம் குறிப்பிடுகின்றது: **மத்தேயு 8:20 அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்.** இவ்வருடம் நீ வரவுக்கு ஏற்ப செலவு செய்து ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ தீர்மானம் எடுத்து தேவநாமத்தை மகிமைப்படுத்துங்கள்.

## 04. புத்தியுள்ள ஸ்திரி

*1சாமுவேல் 25:3-33 அபிகாயில் புத்திசாலி; அவள் புருஷனோ முரடன்.* **1சாமுவேல் 25:17 இப்போதும் நீர் செய்யவேண்டியதைக் கவனித்துப்பாரும்; நம்முடைய எஜமான் மேலும், அவருடைய வீட்டார் யாவர்மேலும், நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது; இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக்கிறார் என்றான்.** *வேலைக்காரரின் புத்திமதியைக் கேட்டாள். அதே அதிகாரம் 28ம் வசனத்தில் அவள் தன் புருஷன் நிமித்தம் மன்னிப்பு கேட்டாள்.* **அத்துடன் 33ம் வசனத்தில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டாள். வரவிருந்த அழிவில் இருந்து பாதுகாத்தாள்.**

கடந்த வருடம் நீ புத்தியில்லாத ஸ்திரியாய் நடந்ததினிமித்தம் பல பிரச்சனைகளை சந்தித்து இருக்கலாம். ஆனால் புதிய வருடத்தில் தேவ ஆலோசனைப்படி புத்தியாய் நடந்தால் **நீதிமொழிகள் 14:1 புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்.** புத்தியுள்ள ஸ்திரியாய் உன் வீட்டை கர்த்தரின் நாமம் மகிமைப்பட கட்டுவாய்.

திருமதி. J.பிலிப்




2. தேவன் தன் கிருபையால் எம்மை அழைத்துள்ளார் 11தீமோ. 1:9

நாம் மகத்தான தேவ திட்டத்தின் ஒரு பங்காக இருக்கிறோம். **தேவன் முடிவை ஆரம்பத்தில் இருந்தே அறிந்து இருக்கிறார்.** தேவன் தன் ஜனங்கள் தன் நாம மகிமைக்கென நிறைவேற்ற வேண்டியதை நிச்சயித்தும் வைத்துள்ளார். **பாடுகளும் அவர் திட்டத்தில் ஒன்று.** இயேசு தேவ சித்தத்திற்குள் தான் பாடுபட்டார். **இந்த வசனத்தில் "கிருபை" என்பதுதான் வலியுறுத்தப்படுகின்றது.**

3. கிறிஸ்து மரணத்தை பரிகரித்தார் 11தீமோத்தேயு 1:10

நாம் எதற்கு பயப்பட வேண்டும்; பாடுகள், மரணத்திற்கும் தான். **பவுல் இந் நிருபத்தை எழுதும் போது மரணத்தை எதிர்நோக்கியபடியே எழுதுகிறார்.** ஆனால் இயேசு இந்த மரணமாகிய கடைசி சத்துருவையும் ஜெயித்தார். **மரணமே உன் கூர் எங்கே?......** கிறிஸ்து மரணத்தை பரிகரித்தவர் மாத்திரம் அல்ல. **ஜீவனையும் அழியாமையையும் வெளியாக்கினவர்.**

**02. கர்த்தருக்காக கட்டப்பட்டதைக் குறித்து வெட்கப்படக்கூடாது 11தீமோ.1:11,12**

பவுல் கைதியாக இருந்தாலும் சுவிசேஷத்திற்கு சாட்சியாக இருக்கிறான். **15வது வசனத்தின்படி தேவையுள்ள சந்தர்ப்பத்தில் எபேசுவிலுள்ள மக்கள் பவுலைவிட்டு விலகிவிட்டனர்.** காரணம், பவுலுடன் தங்களை இனங்காட்ட வெட்கப்பட்டார்கள். **இவர்களோடு ஒத்துப்போய் இருந்தால் தீமோத்தேயுவின் ஊழியம்** இலேசாக **இருந்து இருக்கும்.**

ஆனால் பவுலோ உண்மையாய் இருக்கும் படி கூறுகிறான். **தீமோத்தேயு தன்னோடு கொண்டுள்ள கூட்டுறவைக்குறித்து வெட்கப்படக்கூடாது என்பதற்கு பவுல் கொடுக்கும் காரணங்கள்:**

1. பவுல் தேவனால் அழைக்கப்பட்டவன் 11தீமோத்தேயு 1:11

தேவன் பவுலை தமஸ்கு வீதியில் சந்தித்து ஊழியத்தைக் கொடுத்தார். **இப்போ பவுல் ஒரு பிரசங்கி.** விசுவாசிகள் எனக்கூறப்படும் சிலர் அவன் வார்த்தையை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் **பவுலோ தன் அழைப்பில் இருந்து மாறவும் இல்லை. தன் பிரசங்கத்தை மாற்றவும் இல்லை.**

2. பவுல் ஒரு அப்போஸ்தலன்

பணியோடு அனுப்பப்பட்டவன். **எல்லா கிறிஸ்தவர்களும் அப்போஸ்தலர்கள் அல்ல.** இதற்கு சில நிபந்தனைகளை சந்தித்து கிறிஸ்துவினாலோ அல்லது. பரிசுத்த ஆவியினாலோ அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அப் *1:15-26, 1*கொரி *9:1, 2*கொரி *12:12*

3. பவுல் புறஜாதியாருக்குப் போதகன்

புறஜாதியார் என்ற பதமோ பவுலை சிறையில் தள்ளியது. அப்போஸ்தலர் *22:21-23.* பவுல் **இவர்களுக்கு இரட்சிப்பின் நற்செய்தியை எடுத்து வந்தான்.** இவர்களும் அவனுடன் தங்களை இனங்காட்ட விரும்பவில்லை. மாறாக அவனைக் குறித்து வெட்கப்பட்டார்கள்.

4. பவுலுக்கு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை இருந்தது

நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன். **உபதேசங்கள் முக்கியமானதாக இருந்தாலும் உபதேசங்களில் விசுவாசம் வைப்பது நமக்கு இரட்சிப்பை உண்டு பண்ணாது.** ஒரு பாவி இயேசு எனும் நபர் மீது வைக்கும் விசுவாசமே அவனை இரட்சிக்கும். பவுல் தன் ஆத்துமாவை இரட்சகரின் கவனத்திலும் பாதுகாப்பிலும் வைத்தான். **இயேசுவிடம் வைத்ததை அவர் உண்மையாக காப்பார் என்பதை பவுல நம்பினான்.**

## 03. ஆவிக்குரிய உண்மைப்பற்று/பக்திமை 11தீமோத்தேயு 1:13–18

யாரெல்லாம் பரீட்சையின் போது உறுதியாக நின்றார்களோ அவர்கள் ஊடாகவே கர்த்தருடைய வேலை நூற்றாண்டுகளாக நடத்தப்பட்டுவருகிறது. **இப்படிப்பட்டவர்கள் திவ்விய சத்தியங்களை விட்டுவிலகுவது இவர்களுக்கு சொகுசாக இருந்திருக்கும்.** ஆனாலும் இவர்கள் உறுதியாக நின்றார்கள். **பவுல் இப்படிப்பட்ட ஒரு மனிதன். இவன் தீமோத்தேயுவும் தன் மாதிரியை பின்பற்றும்படி உற்சாகப்படுத்துகிறான்.**

1. தேவ வசனத்தின் மேல் உண்மைப்பற்று வேண்டும்
11தீமோ.1:13-14

ஆவிக்குரிய உண்மை என்ற பொக்கிஷத்தை தேவன் பவுலுக்கு கொடுத்து இருந்தார். **ஆனால் இப்போ இதை பவுல் தீமோத்தேயுவுக்கு ஒப்புக்கொடுத்துள்ளான்.** இப்போ இதை உறுதியாகப் பற்றிக் கொள்ளும் பொறுப்பு முற்றுமாக தீமோத்தேயுவுக்கு உடையது. காத்துக் கொள்வதும் அவன் பொறுப்பு. **அத்துடன் இந்த விலையேறப்பெற்ற சத்தியத்தை மற்றவர்களுக்கும் ஒப்புக் கொடுக்க வேண்டும்.** ஆதித்திருச்சபையில் உபதேசத்தைக் குறித்த ஒரு திட்டவரை இருந்தது. **இதை வைத்துக் தான் எல்லாப் போதனைகளும் பரீட்சித்துப்பார்க்கப்பட்டது.** இதை தீமோத்தேயு மாற்றினால் அல்லது விட்டுவிட்டால் எதைக் கொண்டு இவன் போதனைகளைத் தரம் காணலாம். **உண்மையில் இந்த சத்தியத்தை தீமோத்தேயுவுக்கு ஒப்புக்கொடுத்தது பரிசுத்த ஆவியானவரே ஆகும்.**

அதைக் காத்துக்கொள்ள பரிசுத்த ஆவியானவரே உதவி செய்வார். **வேத வசனங்களை அறிந்து கொள்ளுதல் என வரும் போது பரிசுத்த ஆவியானவரின் உதவி இன்றி நாம் இருளில் தான் இருப்போம்.** ஆரம்பத்தில் இருந்தே கர்த்தருடைய வசனத்தை எதிர்ப்பது தான் பிசாசின் வேலையாக இருந்தது. **"தேவன் சொன்னது உண்டா?" இதுவே அவன் கேள்வி. நம் பதில் என்ன?**

2. தேவ ஊழியர்கள் மீது உண்மைப்பற்று உள்ளவர்களாய் இருக்க வேண்டும் 11தீமோத்தேயு 1:15-18

## 02ம் அதிகாரம்

இங்கு பவுல் ஒரு கிறிஸ்தவ ஊழியனை ஆறு விதமாக சித்தரித்துக் காண்பிக்கின்றார்.

### 01. போர்ச்சேவகன் - 11தீமோத்தேயு 2:3-4

இங்கு இயேசுவின் போர்ச்சேவகனுடைய குணாதிசயம் விளக்கப்படுகின்றது.

1. அவன் தீங்கனுபவிப்பான் அல்லது தீங்கை சகிப்பான். 11தீமோ.2:3
2. பிழைப்புக்கடுத்த காரியங்களில் சிக்கிக் கொள்ளமாட்டான். 11தீமோ.2:4

இவன் தனக்கு மேல் உள்ள ஆணையிடும் அதிகாரிக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து இருப்பான். **பிழைப்புக்கடுக்க காரியங்கள் ஊழியத்தை பெலவீனப்படுத்திவிடும்.**

3. எப்போதும் இயேசுவை மகிமைப்படுத்துவான்.
11தீமோ. 2:8–9

**02. விளையாட்டு வீரன் – 11தீமோத்தேயு 2:5**

வெற்றி பெற சட்ட திட்டங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

**03. பயிரிடுகிறவன் – 11தீமோத்தேயு 2:6–7**

1. இவன் வேலை செய்ய வேண்டும்.
2. இவனுக்குப் பொறுமை வேண்டும்.
3. பலனில் முதல் பங்கடைவான். வசனத்தை விளக்கி சொல்வதனால் உண்டாகும் ஆசீர்வாதம்.

**04. ஊழியக்காரன் – 11தீமோத்தேயு 2:14–18**

1. அங்கீகாரம் பெற்ற ஊழியன் வசனத்தை நிதானமாய் படிப்பான்.
2. அங்கீகாரம் பெற்ற ஊழியன் சீர்கேடான வீண் பேச்சுக்களுக்கு விலகி இருப்பான். இது அவபக்திக்கு வழி நடத்தும்.
3. அங்கீகாரம் பெற்ற ஊழியன் தப்பான உபதேசம் ஆபத்து என அறிந்து அதை எதிர்ப்பான்.

**05. பாத்திரம் – 11தீமோத்தேயு 2:19–22**

பெரிய வீட்டிலே பாத்திரங்கள் உண்டு. கனத்திற்குரியது – வெள்ளி, பொன். *கனம் அற்றது – மரம், மண்.*

**06. வேலைக்காரன் – 11தீமோத்தேயு 2:23–26**

**03ம் அதிகாரம்**

இந்த அதிகாரத்திலே அழுத்திச் சொல்லப்படும் அம்சம் என்னவெனில், *01. அறிவு. 02. உத்தரவாதம்.* **இங்கு கடைசி நாட்களின் தன்மை எப்படிப்பட்டதாக இருக்கும் என பவுல் தீமோத்தேயுவிற்கு விளக்குகின்றார்.** அத்துடன் அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றார். **பவுல் கூறிய மூன்று அறிவுரைகளையும் பார்ப்போம்.**

தொடரும்...

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர்
எம்.எம்.இஸ்பரூபஸ்)



# வியப்பூட்டுகிறதா?




**"பழமை எல்லாம் ஒழிந்து போனதே**
**எல்லாம் புதிதாக தேவனே ஆனதே"**

கடலையும் தரையையும் பார்த்த மனிதக் கண்கள் இன்று வானத்தை அண்ணாந்து பார்க்க ஆரம்பித்திருக்கின்றது. வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுகிறது. அண்ட வெளியின் அஸ்திபாரங்கள் ஆடிக்கொண்டிருக்கிறது, பால்வழி மண்டலங்களில் கோள்கள் கொட்டம் அடித்து கூப்பாடு போடுகிறது.

**ஏன்? என்றால் உலகம் அழியப் போகிறது என்ற சத்தம் திசை எங்கும் மரண ஓலமாய் ஒலிக்கிறது.** மனிதக்கூட்டம் செய்வதறியாது திகைக்கிறது. தேசங்கள் புலம்புகிறது. தேடி வைத்த சொத்துக்கள் உயிர் பெற்று சிரிப்பது போல் இருக்கிறது. வங்கி இருப்புகள் எல்லாம் வடிவங்கள் மாறித்திரிகின்றது.

**இது மனித ஞானத்தால் விளைந்த சத்தம். இதற்கு மேலாய் தேவசத்தம் ஒன்றுண்டு. "வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை"** இந்த வார்த்தையின் பிரகாரம் வானமும் பூமியும் ஒழியும் என்றதைவிட வார்த்தை என்பதற்குள் மறைந்துள்ள சத்தியத்தை அறிய வேண்டும். **வார்த்தை மாம்சமாகி ஜீவனாகி வெளிப்பட்ட இயேசுக்கிறிஸ்துவே என் இரட்சகர், என் மீட்பர், பாவ விமோசனர் என்றதை வார்த்தையின் வெளிச்சத்தில் அறிந்து அவருக்கு உங்கள் வாழ்க்கையை அர்ப்பணிப்பதே அதுவாகும்.**

வார்த்தை சொல்கிறது, **நீ மனந்திரும்பு பூமி அழிவது பெரிதல்ல. நீ நரகம் செல்வது தான் பெரிது.** உன்னை மீட்க வந்த அந்த இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதே மேன்மையானது. அழிவு வர முதல் ஆண்டவரை அறி. அதிகமாய் அவரைச் சார்ந்து கொள். அவரோடு வாழ்ந்திடு. அன்பின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**யோவான் 3:16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு. அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.**

"தேவன் தாமே உங்களை
ஆசீர்வதிப்பாராக"

# குறுக்கெழுத்துப்போட்டி – 53

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ■ | ■ | ■ | | | | | 02 |
| 03 | | | | | | ■ | ■ | |
| 04 | | | | ■ | ■ | | | 05 |
| | | | 08 | ■ | ■ | 07 | 06 | |
| ■ | | | 09 | 10 | ■ | ■ | | ■ |
| ■ | | ■ | | | ■ | | ■ | ■ |
| | 11 | ■ | ■ | | ■ | | ■ | 12 |
| | ■ | 13 | | | ■ | | ■ | |
| 14 | | | | 15 | | 16 | | |

குறிப்பு:– 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். – நன்றி

## இடமிருந்து வலமாக

03. கிருபையும்........... உன்னைவிட்டு விலகாதிருப்பதாக;..........
04. பவுல் இந்த தேசாதிபதியின் முன் குற்றம் சாட்டப்பட்டார்
07. கர்த்தர் சீயோன் வனாந்தரத்தை இதனைப் போலாக்குவார்
13. ................. "நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறியவன்
14. "இதன் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது.

## வலமிருந்து இடமாக

02. இதன் அர்த்தம் "திறக்கப்படுவாயாக"
05. மோசே இத் தேசத்தில் மரித்தான்
08. இவன் மறுபெயர் "பெல்தெஷாத்சார்"
10. இந்தக் கோத்திரத்தார் மற்றக் கோத்திரங்களுடன் எண்ணப்படவில்லை

## மேலிருந்து கீழாக

01. இவள் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டாள்
02. சீதோனியர் இதனைச் சீரியோன் என்கிறார்கள்
06. இவன் பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து பவுலை விட்டுப்பிரிந்து போனான்
09. இயேசு இதை தேவனுடைய வசனத்துக்கு ஒப்பிட்டார்
12. எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றியோடும் நதி

## கீழிருந்து மேலாக

11. இவள் எகிப்து தேசத்தாள்
14. "நீ........ தீமையை நன்மையினாலே.........."
15. யோர்தானில் எடுத்த 12 கற்களையும் யோசுவா இங்கே நாட்டினான்
16. எலியா இந்தப் பர்வதத்தில் தன் முகம் தன் முழங்காலில் படக்குனிந்து பணிந்தான்




## வேதப்பகுதி: உபாகமம் 28:1–11




**ஜே**ம்சுக்கு அவனுடைய அப்பா சனிக்கிழமை ஒரு கிரிக்கட்மட்டை வாங்கித்தருவதாகச் சொல்லியிருந்தார். **சனிக்கிழமை கிரிக்கெட் மட்டைக்காக ஜேம்ஸ் ஆவலோடு காத்திருந்தான்.** ஆனால் கடைத்தெருவிற்கு போய் வந்த அப்பா கிரிக்கெட் மட்டை வாங்கித்தரவில்லை.



ஏன் நீங்கள் சொன்னபடி எனக்கு கிரிக்கெட் மட்டை வாங்கித்தரவில்லை என்று ஜேம்ஸ் கேட்டான். **நீ அதிக நேரம் டி.வி பார்க்கக்கூடாது. பாடங்களை நன்றாக படிக்க வேண்டும். தினமும் பைபிள் படிக்க வேண்டும். காலையில் சரியான நேரத்திற்கு எழும்ப வேண்டும்.** அப்பொழுது உனக்கு கிரிக்கெட் மட்டை வாங்கித்தருவேன் என்று வாக்குறுதி பண்ணினேன். **ஆனால் நீ அப்படியெல் லாம் செய்யவில்லை.**

எனவே கிரிக்கெட் மட்டை வாங்கித் தரவில்லை என்றார் அப்பா. **ஜேம்ஸ் தன் தவறை உணர்ந்தான். தேவன் நமக்குத் தந்தை. நாம் அவருடைய வார்த்தை களுக்கு கீழ்ப்படிந்தால் தான், நாம் ஜெபத்தில் கேட்கும் நன்மைகளை தருவார்.**

**சிந்தனைக்கு: நாம் ஜெபம் செய்தாலும், தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தால் தான் நன்மைகள் கிடைக்கும்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – டிசம்பர் 20

# அருட்பணியாளர் சரிதை

தொடர்ச்சி....

## இலங்கையில் இறைபணியாற்றிய.... ஜோன் ஸ்கடர்

**மாணவர்கள் இருவர் அல்லது மூவரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டார்.** அவர் தீவுகளில் ஒரு சில நாட்கள் என அடிக்கடி தங்கிய சந்தர்ப்பங்களைத் தனது மாணாக்கர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கும் பயன்படுத்தினார்.

### பாடசாலைகள்

**ஸ்கடர் பண்டத்தரிப்பில் அடிப்படைக் கல்விக்கான ஒரு சில பாடசாலைகளை ஆரம்பித்தார்.** அமெரிக்க மிஷனரிகளினால் பாடசாலைகள் நடாத்தப்படும்படியாக அவர்கள் ஒன்று சேர்ந்தனர். அவர்களுடைய கல்வி நிகழ்ச்சியில் முன்னிலைப் பள்ளிகளுக்கடுத்ததாக விடுதிப் பாடசாலைகள் அமைந்தது. இத்தோடு அநேக சுதேசிப் பாடசாலைகளையும், சபைகளையும் அவர் ஆரம்பித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவரது மனைவி ஹரியட் பண்டத்தரிப்பிலுள்ள ஆண் பெண் இருபாலாரையும் உள்ளடக்கிய சிறிய விடுதிப் பாடசாலைக்கு பொறுப்பாக இருந்தார். அந்த விடுதியில் ஏறக்குறைய நாற்பது மாணவர்கள் இருந்தனர். பெண்களுடைய கல்விக்கு விரோதமாக மக்களுடைய சிந்தனை அமைந்திருந்ததால் பெண் பிள்ளைகளைப் பாடசாலைக்குச் சேர்ப்பது கடினமாக இருந்தது. **யாழ்ப்பாண சமூதாயத்தில் பெண்களின் நிலையை விருத்தி செய்வதற்கு இவர்கள் ஆற்றிய பங்களிப்புக்கு பெண்களின் கல்வி ஒரு சாட்சியாக அமைந்தது.** திருமதி ஸ்கடர் மதிய நேரங்களில் பெண்களுக்கு தையல் கற்றுக் கொடுத்தார். காலை நேரங்களில் ஆண்கள் ஆங்கில வாய்ப்பாட்டை ஒப்புவிப்பதைக் கேட்பாள். மூன்று வித்தியாசமான வகுப்புக்களைத் தினமும் நடத்தினாள். **யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ் இன மக்களுக்குப் பெண்களுக்கான பாடசாலை முன்மாதிரியாக இருந்ததுடன் அவர்களது தரத்தை உயர்த்துவதுமாயும் இருந்தது.**

### மருத்துவப் பயிற்சி

**அவர் இரண்டாவது மருத்துவமனையை 1832 ஆம் ஆண்டில் சாவகச்சேரியில் நிறுவினார். முதலாவது மருத்துவ மனையைப் பண்டத் தரிப்பில் நிறுவினார். தொடர்ந்தும் சேவைகள் நடைபெற்று வந்தன. யாழ்ப்பாண வாலிபர்களுக்கு மருத்துவக் காரியங்களைச் செயற்படுத்தும் முறையினை அவர் கற்றுக் கொடுத்தார்**. மக்களுடைய உடல் நலத்துக்கான அவருடைய போராட்டத்தை தனிமையாகச் செலவிடுவது முட்டாள் தனம் என்பதை உணர்ந்தார். அவர் மூன்று வாலிபர்களுக்கு பயிற்சி வழங்கினார். அதில் இருவர் தமிழரும், ஒருவர் பறங்கியருமாக இருந்தனர். சுதேசிகளுக்கு மேற்கத்தேய மருத்துவக் கல்வியினை வழங்கத் தொடங்கினார். கொழும்பிலே மருத்துவ மனையை ஆரம்பிப்பிதற்கு முன்பாகவே இதனை செய்தார்.

## வேலை

இலங்கையில் 17 வருட மிஷனரிப் பணி செய்ததின் பின் அவர் இந்தியாவுக்குச் சென்றார். மருத்துவ சுவிசேஷ ஊழியத்துக்கு உதவியாக மருத்துவ ஊழியம் எவ்வளவு முக்கியம் என்தையும் அவர் நம்பச் செய்தார். ஜோண் ஸ்கடர் மருத்துவ மிஷனரிப் பணியின் ஒரு முன்னோடியாக இருந்தார். இலங்கையில் 17 வருட காலமாகச் செய்த ஊழியம் இவரது சமகால மிஷனரி ஊழியரது ஊழியத்தை விடத்தனித்து விளங்கியதற்கு காரணம் இவர் மருத்துவத்தையும் சுவிசேஷத்தையும் ஒன்று சேர்த்துச் செயற்பட்டதேயாகும். 1824இல் ஜோண் ஸ்டகர் அவர்களது சரீர சுகம் பாதிப்படைந்ததோடு அதிலிருந்து தொடர்ச்சியாக இவரது சரீர சுகம் நிலையானதாக இருக்கவில்லை. அவரோடிருந்த மற்ற மிஷனரிகள் அவரது குடும்பத்தினரை வெப்ப நிலையான இலங்கையிலிருந்து இந்தியாவின் நீலகிரி மலைப் பிரதேசத்துக்குச் செல்லும்படி சொன்னார்கள். **அவரும் அவரது மனைவி ஹரியட் உட்பட எஞ்சியிருந்த ஆறு ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் இலங்கையைவிட்டு 1836இல் ஊழியப்பணிக்காக தென்னிந்தியாவை வந்தடைந்தார்கள்.**

## இலக்கியம்

தெற்காசியாவில் சமய சம்பந்தமான துண்டுப்பிரதிகளை விநியோகிப்பவர்களில் மிகவும் விடாமுயற்சியுள்ளவரான ஒருவராக ஜோண் ஸ்கடர் இருந்தார். இவரது துண்டுப்பிரதிகள், பத்திரிகைகளில் அநேகமானவை பின்னர் மிஷனரி ஹரல்ட் எனும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது. இத் துண்டுப்பிரதிகள் அவரது பிரசங்கத்துக்குத் துணையாக இருந்தது. மதுரையை அடைந்ததும் அவரது முதல் அனுபவமே சந்தோஷமான அனுபவமாக இருந்தது. **ஏனெனில் பதினைந்து வருடங்களுக்கு முன்பு இலங்கையில் அவர் கொடுத்த துண்டுப்பிரசுரத்தை வாசித்து இரட்சிப்படைந்த இன்னுமொரு பெண்ணை அங்கு சந்தித்தார்.** அவர் எழுதியவையானவன: "கிழக்கிலிருந்து வரும் கடிதங்கள்" (பொஸ்டன் 1833), "அந்நியர்கள் சார்பில் வாலிபர்களுக்கான முறையீடு" (1846), "பக்தியான இளம் வாலிபருக்கான கடிதங்கள்" (1846), "யோர்தானைக் கடப்பதற்கான சந்திப்புக்கள்" (நியுயோர்க் 1852) என்பனவாகும். அநேகமான இவரது துண்டுப்பிரதிகளும் பத்திரிகைகளும் பின்னர் மிஷனரி ஹரல்ட் எனும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது.

## மரணம்

அவர் தனது உடல்சுக நலத்துக்காகத் தென் ஆபிரிக்காவிலுள்ள கேப் ஒப்(க)குட் கோப் எனும் நகரத்திலுள்ள வயின் பேக் எனும் இடத்துக்குப் பிரயாணப்பட்டுப் போனார். **அவர் ஆபிரிக்காவில் 1855ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் தேதியன்று மரணமடைந்தார்.** அவர் மருத்துவ அருட்பணியை மாத்திரமன்றி மிஷனரிகளின் குடும்பத்தினரையே பின்வைத்துப் போனார். அவரது ஆறு மகன்மாரும் இரண்டு மகள்மாரும் அவரது முன் மாதிரியைப் பின்பற்றினர். ஒருவர் இலங்கையில் பணி செய்தார். அது மாத்திரமல்ல தெற்காசியாவில் கிறிஸ்தவ மருத்துவ மிஷனரிப் பணிக்கென குடும்பத்தில் நான்கு தலைமுறைகளில் 42 அங்கத்தவர்களை அர்ப்பணித்த ஸ்கடர், வருடங்களை ஒன்றிணைத்துப் பார்க்கும் போது 1100 இற்குமதிகமான

வருடங்களில் கிறிஸ்தவ மருத்துவ ஊழியம் செய்திருக்கிறார். இவரது பேத்தியான ஐடா ஸ்கடர் வேலூர் மருத்துவமனையை ஸ்தாபித்தார்.

## குடும்பத்தினரின் அர்ப்பணம்

டாக்கடர் ஜோண் ஸ்கடர் அவர்களின் மூன்று மகன்மாரும் 1853ஆம் ஆண்டு ஆர்கொட் மிஷனை ஸ்தாபித்தனர். டாக்டர் ஐடா சோப்பியா ஸ்கடர் (1870 டிசம்பர் 9 முதல் 1960 மே 24) வரை இந்தியப் பெண்களின் நிலமைக்காகவும் தொழுநோய், கொலரா, பிளேக் ஆகிய நோய்களைக் குறித்தும் எதிர்த்து செயற்பட்டார் இவரது பேத்தி. 1918இல் ஆசியாவில் கற்பிக்கும் வைத்தியசாலை ஒன்றினையும் ஆரம்பித்தார். அங்குதான் அவரது பாட்டனார் மிஷன் நிலையத்தை ஸ்தாபித்தார். **இது உலகிலேயே மிகவும் பெரிய மருத்துவமனையாகும்.**

## மீளாய்வு

அவர்களது அவதானத்தையும் சக்தியையும் நேரடியான பிரசங்கத்திற்கு கொடுத்ததோடு, கல்வி மனிதாபிமானச் சீர்திருத்தம், சமுகச் சீர்திருத்தம், மனிதத் துவம், கல்வித்தகமை என்பவற்றிலும் இணைந்து ஈடுபட்டார்கள். **ஜோண் ஸ்கடர் அவர்களது வேலை, தரிசனம், அர்ப்பணம், சுவிசேஷ வெளிக்களப்பணியில் களைப்படையாத பிரயாசம் என்பவற்றை எவரும் அளவிடமுடியாது.** அது அவரது கனவுகளை மற்றவர்கள் பின்பற்ற வழிவகுத்தது. உதாரணமாக: **புத்தூரின் மிகப்பிரபல்யமான கிரீன் ஞாபகார்த்த வைத்தியசாலையானது இம் மகத்தான மனிதரால் கட்டப்பட்டது.** அவர் தனது மருத்துவ நிகழ்வுடன் இணைந்ததாக மதுபானப் பாவனைக்கு எதிரான ஒரு போராட்டத்தை நடத்தினார். **1835இல் யாழ்ப்பாணத்தில் மதுபானம் தொடர்பானவற்றிற்கு எதிராக ஒரு சங்கத்தை உருவாக்கினார்.**

தமிழில் இந்த விடயம் சம்பந்தமாக நூல் வெளியிடப்பட்டு பரந்தளவில் விநியோகிக்கப்பட்டது. **கல்விக்கு, மருத்துவத்திற்கு, பிரசங்கத்திற்கு, துண்டுப்பிரதிகள் எழுதுவதற்கு, சபைகளை ஸ்தாபிப்பதற்கு இவையனைத்திற்குமான இவரது பங்களிப்பு இவரது ஊழியம் என்பன மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பங்களிப்பு செய்ததுடன் அவருக்குப் பின் வந்த மிஷனரிகளுக்கும் உதவியது.** ஒரு நாடாக, கிறிஸ்தவர்களாக இந்த மகத்தான தேவ மனிதனுக்கு நாங்கள் அதிக கடன்பட்டுள்ளோம். ஜோண் ஸ்கடர் மற்றவர்களைச் சேவிப்பதன் மூலம் தன் எஜமானை சேவித்து வந்தார். அவர் வாழ்க்கையும் இதற்கு முன்னுதாரணமாய் இருந்தது. இந்தக் குணாதிசயத்தை எம்மால் மீளாய்வு செய்ய முடியாது. இவர் பின்வைத்துப் போன காரியமானது அடுத்த சந்ததியிலுள்ளவர்களைப் பயிற்றுவிக்கும்படி மற்றவர்களைப் பயிற்றுவித்தலாகும்.

**முற்றும்.**

நன்றி: இவ் வாழ்க்கை சரிதையானது பேராசிரியர் சோமரத்ன என்பவரால் எழுதப்பட்டதன் தமிழாக்கமாகும்.

*தேவ சித்தத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள்;*
*தேவனை முதன்மைப்படுத்துவர்கள்*

# பூமாரி

2013 2013 2013 2013

## முத்துக்கள்

முன்னே இயேசு
பின்னே
"நான்"

ஜெபிப்பவன்
ஆண்டவரின்
பணியாள்

அழிவுக்கு முன்னான
மெய்
மேட்டிமை

ஆவிக்குரிய சிறை
அகலமான
இறகுகள் உடையது

அதிகாரங்கள் அறுந்தால்
ஆட்சிகள்
இடம்பெயரும்

நாம் என்பது
தேவன்
இல்லாதபோது

நீ வாசிப்பது
வேதமானால்
நீ வாழ்வாய்

வாழும் வாழ்வு
பரலோக
மகிமைக்கான வாழ்வு

ஜெபத்தில்
நீ விதைத்தால்
ஜெயமாய் அறுப்பாய்

சட்டம் சரிய
திட்டமிட்டு
ஜெபி

## குறுக்கெழுத்துப் போட்டி – 52
## 2013 சரியான பதில்கள் 2013

**இடமிருந்து வலமாக**

01. யோவாஸ்
02. யெருபாகால்
06. தாகோன்
10. கோகாத்
14. எப்பிராயீம்

**வலமிருந்து இடமாக**

02. லிவியாதான்
05. கீலேயாத்
08. சிம்சோன்
09. கிறிஸ்பு
11. கிரேத்தா

**மேலிருந்து கீழாக**

01. யோனத்தான்
04. காத்திரு
07. எலிசாவை

**கீழிருந்து மேலாக**

12. சாலொமோன்
13. எப்பிராத்தா
14. எரிகோ



## வினாவிடை – 54
## சரியான பதில்கள்



*01.* அப்சலோம் - 11சாமுவேல் *16:17*
*02.* ஆபிரகாம் - யாக்கோபு *2:23*
*03.* மீகா *7:5*
*04.* கோரேஸ் ராஜா - எஸ்றா *5:15*
*05.* யோதாம் - 11நாளாகமம் *27:1-2*
*06.* யெப்தா - நியாயாதிபதிகள் *11:11*
*07.* எப்பிராயீமில் தங்கியிருந்த லேவியன் - நியாயா *19:18*
*08.* யோபு - யோபு *16:20*
*09.* அபிசாய் - 11சாமுவேல் *23:18-19*
*10.* ஆபகூக் *2:20*



# வினா விடை - 54

## சரியான விடை எழுதியவர்கள்

01. அ.எஸ்தர் - காரைநகர்
02. அ.கிருசாந்தன் - காரைநகர்
03. அ.துர்க்கா - காரைநகர்
04. ரி.பத்மலோஜி - பொன்னகர்
05. சி.மதனரூபினி - பொன்னகர்
06. எ.சுபாஜினி - பொன்னகர்
07. கு.குயின்றா - பொன்னகர்
08. மோ.மிதுனகோபி - ஐயன்கன்குளம்
09. செ.கமளினி - பொன்னகர்
10. ச.கிருசாந்தினி - ஐயன்கன்குளம்
11. ப.அனுஷா - மீசாலை
12. ப.நேருதி - மீசாலை
13. து.கிருஷ்ணகுமார் - ஊர்காவற்றுறை
14. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
15. து.கிரிசாந் - ஊர்காவற்றுறை
16. வி.சர்மிளா - ஊர்காவற்றுறை
17. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
18. வி.கலியுகன் - ஊர்காவற்றுறை
19. செ.கனிஸ்ரா - பள்ளிக்குடா
20. மு.கிறேசி - பள்ளிக்குடா
21. அ.சுதர்சினி - வேரவில்
22. பா.காசினி - பள்ளிக்குடா
23. வி.தயாழினி - பாண்டவெட்டை
24. அ.கம்சிகா - காரைநகர்
25. கு.பிருந்தா - பொன்னகர்
26. உ.துஷாந்தினி -
27. ந.நந்தினி - பொன்னகர்
28. த.தமிழினி - ஐயன்கன்குளம்
29. த.தயாழினி - புத்துவெட்டுவான்
30. த.தமிழ்வாணி - ஐயன்கன்குளம்
31. வி.டயந்தினி - ஐயன்கன்குளம்
32. பே.தட்சிகா - ஐயன்கன்குளம்
33. பு.ஊர்மிலா - ஐயன்கன்குளம்
34. ம.நிருசிகா - பொன்னகர்

# குறுக்கெழுத்துப் போட்டி - 52

## சரியான பதில் எழுதியவர்கள்

01. வி.தயாழினி - பொன்னகர்
02. அ.கம்சிகா - காரைநகர்
03. கு.பிருந்தா - காரைநகர்
04. உ.துஷாந்தினி
05. ந.நந்தினி - பொன்னகர்
06. த.தமிழினி - ஐயன்கன்குளம்
07. த.தயாழினி - ஐயன்கன்குளம்
08. த.தமிழ்வாணி - ஐயன்கன்குளம்
09. வி.டயந்தினி - ஐயன்கன்குளம்
10. பே.தட்சிகா - ஐயன்கன்குளம்
11. பு.ஊர்மிலா - ஐயன்கன்குளம்
12. ம.நிருசிகா - பொன்னகர்
13. ச.கிருசாந்தினி - ஐயன்கன்குளம்
14. மோ.மிதுனகோபி - ஐயன்கன்குளம்
15. கு.குயின்றா - பொன்னகர்
16. எ.சுபாஜினி - பொன்னகர்
17. சி.மதனரூபினி - பொன்னகர்
18. ரி.பத்மலோஜி - பொன்னகர்
19. அ.எஸ்தர் - காரைநகர்
20. அ.கிருசாந்தன் - காரைநகர்
21. அ.துர்க்கா - காரைநகர்
22. இ.ஏஞ்சலின்கிறிஸ்லினா- ப.குடா
23. க.இளங்கோவன் - பள்ளிக்குடா
24. செ.கமளினி - பொன்னகர்
25. இ.ரஸ்சியா - பள்ளிக்குடா
26. இ.துஷ்யந்தன் - பள்ளிக்குடா
27. இ.கருணாகுமி - பள்ளிக்குடா
28. எஸ்.மாக்கிரட் - மீசாலை
29. எஸ்.சனோஜா - மீசாலை
30. எஸ்.யோகேஸ்வரி - மீசாலை
31. மா.ஜெயந்தினி - மானிப்பாய்
32. நா.கஸ்தூரி - மானிப்பாய்
33. செ.கனிஸ்ரா - பள்ளிக்குடா
34. மு.கிறேசி - பள்ளிக்குடா
35. பா.நிதுசன் - பள்ளிக்குடா
36. க.கிறேஸ்சொற்சியாள் - ப.குடா
37. பா.காசினி - பள்ளிக்குடா
38. அ.சுதர்சினி - வேரவில்
39. ஜா.பிலோமினா - கோண்டாவில்
40. சி.தங்கமணி - மீசாலை
41. பி.நேசமணி - மானிப்பாய்
42. வி.சிறிகரன் - மீசாலை
43. இ.சுரேகா - மீசாலை
44. இ.சுலேந்தன் - மீசாலை
45. ப.நேருதி - மீசாலை
46. வி.தனுசியா - மீசாலை










ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிறந்திருக்கும் இப் புத்தாண்டில் இவ் அனல் சஞ்சிகை வழியாக உங்களை சந்தித்து வாழ்த்து தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நிச்சயமாகவே, பிறந்திருக்கும் இவ் 2013ம் ஆண்டு ஆண்டவர் உங்களோடு கூடஇருந்து அசையாதபடி காத்து முடிவு மட்டும் நடத்துவாராக!.

கடந்து முடிந்த 2012ம் ஆண்டில் தேவன் நமக்கு; **"யோபு 42:2 தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது"** என்ற வார்த்தையைத் தந்தார். **அந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து ஆண்டு முடிவு மட்டும் கர்த்தர் என்னென்ன காரியங்களை நினைத்தாரோ அவையெல்லாவற்றையும் தடையில்லாமல் செய்து முடிக்க கிருபை கொடுத்தார்.**

அநேகருடைய சாட்சிகளைக் கேட்கும் போது வாக்குப்பண்ணிய ஆண்டவர் வாக்கு மாறாதவர் என்பதனை மீண்டும் ஒரு முறை நமக்கு வெளிப் படுத்தி அவர் சொன்ன வார்த்தையிலே

2012ம் ஆண்டுவரை உண்மை யாக இருந்தமையால் அவரை உயர்த்துகின்றேன்.

**புதிய ஆண்டில் ஆண்டவர் சபையாக எம்மைப் பார்த்து "அப்போஸ்தலர் 18:10 நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும் படி ஒருவனும் உன்மேல் கைபோடு வதில்லை" என்றவாக்குத்தத்தத்தை நமக்கு கொடுத்திருக் கின்றார்.**

அப்போஸ்தலர் 18ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு கொரிந்து பட்டணத்திற்கு வருகின்றார். அங்கே ஆக்கில்லா, பிரிஸ்கில்லா வீட்டுக்குச்சென்று அவர்கள் செய்கின்ற கூடார தொழிலை தானும் செய்து வருகின்றார். **அதே நேரத்தில் ஓய்வுநாளில் தேவ ஆலயத்திற்கு சென்று அங்கே யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொல்லிக் கொண்டு வருகின்றார்.** அவருக் குள்ளே ஒரு வைராக்கியம் கொழுந்து விட்டெரிய **"இயேசுவே கிறிஸ்து"** என்று யூதருக்கு தெளிவாக திருஷ்டாந்தப்படுத் தினார். **இதை அவர் செய்யும் போது மிகுந்த எதிர்ப்பு. தூஷிப்பை சந்திக்கின்றார்.** யூதர்கள் அவனை மிகவும் எதிர்க்கின்ற போது அந்த இராத்திரியிலே தேவன பவுலுக்கு தரிசனமாகி கூறிய

**"நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை.**

எதிர்ப்பு எழும்பின போது தான் ஆண்டவர் தரிசனமாகின்றார். ஆண்டவர் சொன்னார்: **"நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும் படி ஒருவனும் உன்மேல் கை போடுவதில்லை"**

> **எதிர்ப்பு எழும்பின போது தான் ஆண்டவர் தரிசனமாகின்றார். ஆண்டவர் சொன்னார்: நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும் படி ஒருவனும் உன்மேல், கை போடுவதில்லை**

**இந்த வசனத்தை கொடுத்த பின்னர் கூட பவுல் நியாயசனத்துக்கு முன்பாக கொண்டு போகப்படுகின்றார். எதிர்புகள் தொடர்கின்றன. எதிர்ப்புகள் மத்தியிலும் ஆண்டவர் அவனை தைரியப் படுத்த இவ் வார்த்தை களைக் கொடுத்தார்.** இந்த ஆண்டில் பல எதிர்ப்புகள் நமது வாழ்க்கையில் எழும்பி னாலும் ஒன்றை நினைவுபடுத் துவோம்; **தேவன் பவுலுக்கு தம்மை வெளிப்படுத்தியது போல தேவ நாமத்தில் உங்களையும் தைரியப்படுத்துகின்றார்.**

எசேக்கியா ராஜாவின் வாழ்க்கையில் நடந்த ஓர் சம்பவத்தை அவதானிப்போம்:

**11நாளாகமம் 32, 11இரா ஜாக்கள் 18, 19ம்** *அதிகாரங் களில் பார்க்கும் போது; அசீரியா ராஜா எல்லா தேசங்களிலும் யுத்தம் பண்ணி வெற்றி பெற்றுக் கொண்டு வருகின்றான். ஒரு பலமுள்ள யாராலும் விழுத்த முடியாதஒரு சேனை. இப்பொழுது யூதா வசமாய் திரும்பி, யூதாவை யும் மேற்கொள்ள ஆயத்தமாகி யூதா ஜனங்களுக்கு கோபம்மூட்டி அசீரியர் பேசுகின்றனர்.* **11இரா ஜாக்கள் 18:28-35 (28.) ரப்சாக்கே நின்றுகொண்டு யூதபாஷையிலே உரத்தசத்தமாய்: அசீரியா ராஜா வாகிய மகாராஜாவுடைய வார்த்தை யைக் கேளுங்கள். 29. எசேக்கியா உங்களை வஞ்சியாதபடி பாருங்கள்; அவன் உங்களை என் கையிலிருந்து தப்புவிக்கமாட்டான். 30. கர்த்தர் நம்மை நிச்சயமாய்த் தப்புவிப்பார்; இந்த நகரம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, எசேக்கியா உங்க ளைக் கர்த்தரை நம்பப்பண்ணுவான்; அதற்கு இடங்கொடாதிருங்கள் என்று ராஜா சொல்லுகிறார். 31. எசேக்கியா வின் சொல்லைக் கேளாதிருங்கள்; அசீரியா ராஜா சொல்லுகிறதாவது: நீங்கள் என்னோடே ராசியாகி, காணிக் கையோடே என்னிடத்தில் வாருங்கள்; நான் வந்து, உங்களை உங்கள் தேசத்துக்கு ஒப்பான தானியமும் திராட்சத்தோட்டமுமுள்ள தேசமும், அப்பமும் திராட்சரசமுமுள்ள தேசமும், ஒலிவ எண்ணெயும் தேனுமுள்ள தேசமுமாகிய சீமைக்கு அழைத்துக் கொண்டு போகுமளவும், 32. அவனவன் தன்தன் திராட்சச்செடியின் கனியையும் தன்தன் அத்திமரத்தின் கனியையும் புசித்து, அவனவன் தன் தன் கிணற்றின் தண்ணீ ரைக் குடியுங்கள்; இவ்விதமாய் நீங் கள் சாகாமல் பிழைப்பீர்கள்; கர்த்தர் நம்மைத் தப்புவிப்பார் என்று உங்களைப் போதனைசெய்ய எசேக்கியாவுக்குச் செவிகொடாதிருங்கள். 33. ஜாதிக ளுடைய தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜா வின் கைக்குத் தப்புவித்ததுண்டோ? 34. ஆமாத், அர்பாத் பட்டணங்களின் தேவர்கள் எங்கே? செப்பர்வாயிம், ஏனா, ஈவாப் பட்டணங்களின் தேவர் கள் எங்கே? அவர்கள் சமாரியாவை என் கைக்குத் தப்புவித்ததுண்டோ? 35. கர்த்தர் எருசலேமை என் கைக்குத் தப்புவிப்பார் என்பதற்கு அந்தத் தேசங்களுடைய எல்லா தேவர்களுக்குள்ளும் தங்கள் தேசத்தை என் கைக்குத் தப்புவித்தவர் யார் என்கிறார் என்று சொன்னான்.**

*இந்த இழிவான வார்த்தை களை கேட்டும் யூதா ஜனங்கள் செய்தது என்ன தெரியுமா?* **11இராஜாக்கள் 18:36 ஆனாலும் ஜனங்கள் அவனுக்கு ஒரு வார்த்தை யும் பிரதியுத்தரமாகச் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள்; அவனுக்கு மறுஉத்தரவு சொல்லவேண்டாம் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான்.** *அமைதி! ஏன்? இராஜா சொன் னான்: எதுவும் பேசவேண்டாம். எதிர்ப்புகள், பயங்கரங்கள், இழிவான வார்த்தைகள் ஜனங் களை நோக்கி பேசப்படுகின் றது. கடினமான சூழ்நிலைக்குள் ஜனங்கள் தள்ளப்பட்டார்கள்,* **கோபம் பற்றியெரிந்து கொண்டிருந்தாலும் தங்கள்**

தலைவனாகிய ராஜா சொன்ன வார்த்தையை களப்படுத்தி எந்த எதிர்வார்த்தைகளோடு, எதிர்விளைவுகளோகாட்டாமல் கீழ்ப்படிந்து அமைதியாய் இருந்தார்கள். உலக பார்வையில் பார்த்தால் ஜனங்கள் எதிர்பேசினால் அதனை நியாயப்படுத்தி இருக்கலாம். நாம் செய்கின்ற காரியங்களை நியாயப் படுத்துவது முக்கியமல்ல. மாறாக தேவனெமக்கு கொடுத்த தலைவர்களுக்கு கீழ்ப் படிவது தான் மேன்மை யான காரியம்.

ஆகவே <u>இந்த ஆண்டில் சூழ் நிலைகள் பாதகமாயிருந்தாலும் உங்கள் மேய்ப்பருக்கு மட்டும் செவிகொடுங்கள்! நிச்சயம் தேவன் உங்கள் சார்பில் செயலாற்றுவார்.</u> இப்படிப்பட்ட கடினமான சூழ்நிலையில் ராஜா என்ன செய்தான்? 11நாளாகமம் 32:20 இதினிமித்தம் ராஜாவாகிய எசேக்கியாவும் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியும் பிரார்த்தித்து, வானத்தை நோக்கி அபயமிட்டார்கள். தேவனுடைய மனுஷனுடன் இணைந்து பிரார்த்தித்து ஜெபிக்கின்றார். தனிமையில் அல்ல தேவன் அவனுக்காக கொடுத்த தேவ மனுஷனுடன் அவன் இணைந்து ஜெபித்த போது; தூதனை தேவன் அனுப்பி அவர்களுக்காக யூதா மக்களுக்காக கிரியை செய்தார். 11இராஜாக்கள் 19:35 அன்று இராத்திரியில் சம்பவித்தது என்னவென்றால்: கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள். அதிகாலையில் அற்புதத்தைக் கண்டார்கள்.

**<u>"நாம் செய்கின்ற காரியங்களை நியாயப்படுத்துவது முக்கியமல்ல. மாறாக தேவன் எமக்கு கொடுத்த தலைவர்களுக்கு கீழ்ப்படிவது தான் மேன்மையான காரியம்"</u>**

தேவ ஜனமே! இந்த ஆண்டில்உனக்கு என்ன சூழ்நிலை சூழ்ந்து கொண்டாலும் ஒரு தீர்மானம் எடுத்து; தேவன் உனக்கு தந்த தேவ மனுஷனுடன் இணைவது மாத்திரமல்ல தேவனை நோக்கிப்பார். அவர் உன்னுடன் இருப்பார். யாரும் உன் மேல் கைபோட அனுமதிக்கவேமாட்டார்.

இந்த வாக்குத்தத்ததின் பின்னரும் பவுல் பல தடவைகள் வேதனை, அடி உதை பெற்று கடினமான முறையில் மரணத்தை தழுவினார். ஆனால் எந்த ஒரு காரியமும் அவனுடைய ஆத்துமாவில் கைபோட முடியாமல் போனது. தனது ஆத்துமாவைக் காத்துக் கொண்டான்.

உண்மையாக நடந்த ஒரு சம்பவம்;
ஒரு தேவமனுஷன் ஊழியத்தின் நிமித்தமாய் தூர இடங்களுக்கு பிரயாணம் செய்துவந்தான். பிரயாணம் செய்கின்ற போது இராத்திரி வேளைகளில் தங்குவதற்காக தன்னுடன் ஒரு கூடாரத்தையும் எடுத்துச் செல்வான். இத் தேவஊழியருடைய கூடாரத்திற்குள் இராத்திரிவேளை புகுந்து அவரைக் காயப்படுத்தி

ஏதாவது திருடும் நோக்குடன் ஒரு திருடன் இவரைப் பின்தொடர்ந்து செல்வான். ஒவ்வொரு இராத்திரியும் இவனால் அந்தக் கூடாரத்திற்குள் நுழைய முடியாமல் போய்விடும். ஆனால் ஒரு நாள் திடீரென்று கூடாரத்திற்குள் அவன் புகுந்துவிட்டான். புகுந்து நித்திரையாய்கிடந்த தேவ ஊழியரைத் தட்டி எழுப்பி அவரிடம் அவன் கேட்டான், ஐயா! இவ்வளவு நாட்களாக உங்களைப் பின்தொடர்ந்து உங்கள் கூடாரத்திற்குள் திருடும் நோக்குடன் நான் வந்து கொண்டிருக்கின்றேன். ஒவ்வொரு இராத்திரியும் நீங்கள் கூடாரம் அமைத்து தங்கும் போது கூடாரத்திற்குள் வரமுயற்சிப்பேன். ஆனால் உங்கள் கூடாரத்தைச் சுற்றி எப்போதும் யாரும் நுழையக் கூடாதபடி அக்கினி எரிந்தவண்ணமாக மதிலைப்போல இருக்கும். ஆனால் இன்றைக்கோ ஒரு சிறிய ஓட்டை (இடைவெளி) காணப்பட்டது. அவ் ஓட்டைக்கூடாக நான் புகுந்துவிட்டேன். ஏன் ஐயா இன்றைக்கு நான் உங்கள் கூடாரத்திற்குள் வரக்கூடியதாக இந்த இடைவெளி ஏற்பட்டதன் காரணம் என்ன என்று கேட்டான். அப்பொழுது அந்த தேவஊழியர் அத் திருடனுக்குச் சொன்னார்; ஒவ்வொரு நாளும் இராத்திரி நான் படுக்கும்முன்பதாக முழங்கால் படியிட்டு ஜெபிப்பேன். ஆனால் இன்றைக்கு அதிகமாக ஊழியம் செய்து அதிக தூரம் நடந்து களைத்துப்போனேன். இதனால் அப்படியே வந்து தூங்கிவிட்டேன். இன்றைக்கு நான் ஜெபிக்காததன் நிமித்தமாகத் தான் அவ் ஓட்டை ஏற்பட்டது.

பிரியமான தேவஜனமே! தேவனுடன்நமக்குள்ளதொடர்பை நாம் துண்டிப்போமானால் எமது பாதுகாப்பு வேலியிலும் ஓட்டை (இடைவெளி) விழுந்துவிடும். பிசாசு எம்மீதும் எமது ஆத்துமா மீதும்கைவைக்க அது இலகுவாகிவிடும். எனவே எம்முடைய பாதுகாப்பு வேலியில் இடைவெளிவராமல் தடுக்க வேண்டியது எமது கடமையாகும். **ஆகவே தேவனோடுள்ள உங்கள் தொடர்பு அதிகமாகட்டும். அப்போது தேவன் உங்களோடு வருவார். அப்போது உங்கள் ஆத்துமாவின்மேல்யாரும்கைபோட முடியாது.**

**ஆகவே இந்தப் புதிய ஆண்டிலே தேவன் உங்களோடு கூட இருப்பாரானால் உங்கள் மேல் யாரும் கைபோட அவர் விடமாட்டார். எல்லாவற்றிற்கும் மேலாக எமது ஆத்துமாதான் முக்கியமானது. அதனை கறைபட்டுப்போகாமல் காத்துக்கொள்ளுவோம். தேவனுடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது, ஆயத்தமாவோம்! ஆயத்தப்படுத்துவோம்!!.**

**முற்றும்.**

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**போதகர் ஜோஹணன் டி.பிலிப்**

**"நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும் படி ஒருவனும் உன்மேல் கைபோடு வதில்லை." அப்போஸ்தலர் 18:10**

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

### சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

### சந்தா கூப்பன்

பெயர் :-....................................................

விலாசம் :-....................................................

..................................................................

..................................................................

..................................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

# புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

To:....................................................................

....................................................................

....................................................................

....................................................................

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**